செய்தி வெளியீடு எண்:612 நாள்:14.08.2021

# செய்தி வெளியீடு

## ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை’ மூலம் மொத்தம் 4.57 இலட்சம் மனுக்கள் மீது நடவடிக்கை - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி, சிறப்பாகச் செயல்பட்ட அலுவலர்களை நேரில் அழைத்து விருது மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், கடந்த சட்டமன்றத் தேர்தல் பரப்புரையின்போது, மாவட்டங்கள்தோறும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களுக்கு, தான் பதவியேற்றதும் 100 நாட்களில் தீர்வு காணப்படும் என அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு, "உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை" 07.05.2021 அன்று உருவாக்கப்பட்டது. மாநிலம் முழுவதிலுமிருந்து பெறப்பட்ட சுமார் 4 இலட்சத்து 50 ஆயிரம் மனுக்கள் இத்துறையிடம் நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டன. இம்மனுக்கள் துறை வாரியாகவும், மாவட்ட வாரியாகவும் பிரிக்கப்பட்டு, அடுத்தக்கட்ட செயலாக்கத்திற்காக முதலமைச்சர் உதவி மையம் என்ற இணையதள முகப்பில் மின்னணு முறையில் பதிவு செய்யப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கும் இத்துறையால், 100 நாட்களில் அனைத்துத் துறைகளின் வாயிலாக மொத்தம் 4,57,645 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில், **மொத்தம் ஏற்கப்பட்ட மனுக்கள் 2,29,216 ஆகும்.** இவற்றில் குறிப்பாக:

- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மூலம் 32,283 பட்டா, 30,455 சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் மற்றும் இதர நலத்திட்ட உதவிகள்.
- ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் 19,664 கட்டமைப்புப் பணிகள், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையின் மூலம் 9444 வீடுகள் கட்ட உதவி, தனி நபர் மற்றும் பொதுக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.544.27 கோடி மதிப்பிலான பணிகள் மற்றும்

- இதர துறைகள் மூலம் 1,46,814 கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளன. இவற்றில் 80,704 மனுக்களுக்கு நிதி ஒதுக்கீடு பெற்றதும் விரைவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்.

கடந்த 100 நாட்களில், தீர்வு காணப்பட்டுள்ள மனுக்களின் இந்த எண்ணிக்கை, நம் மாநிலத்தில் இதுவரை முதலமைச்சர் தனிப் பிரிவால் இரு வருடங்களில் தீர்வு காணப்படும் எண்ணிக்கையை விட அதிகமானதாகும். வழக்கமாக 24 மாதங்களில் முடிக்கப்படும் இப்பணி, மூன்றே மாதங்களில், அதுவும், கொரோனா நோய்த் தொற்றுப் பேரிடர் காலத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மீதமுள்ள மனுக்களில், முழுமையான முகவரி மற்றும் தொலைபேசி எண் இல்லாமலும், தெளிவான கோரிக்கைகள் இல்லாமலும், ஆலோசனைகள் தெரிவிக்கும் வகையிலும் இருக்கின்ற மனுக்களை தற்போது ஏற்க இயலவில்லை. இருப்பினும், இம்மனுக்கள் மீது மனுதாரர்கள் சரியான விவரங்களுடன், மறுபரிசீலனை கோரினால் மீண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, தீர்வு காணப்படும்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் சிறப்பு அலுவலர், துறையால் நூறு நாட்களில் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சமர்பித்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று (14.8.2021) தலைமைச் செயலகத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டன. (விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளது)

மேலும், மனுக்களை கையாள்வதில் சிறப்பாகச் செயல்பட்டுள்ள மாவட்டங்களை அடையாளம் காண காரணிகள் வகுக்கப்பட்டு முதல் மூன்று இடங்கள் பெற்றுள்ள மாவட்டங்களுக்கு பாராட்டு சான்றிதழும் விருதுகளும் வழங்கப்பட்டன. அந்த வகையில், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் Dr. K. செந்தில் ராஜ் இ.ஆ.ப., அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி P. இரமண சரஸ்வதி இ.ஆ.ப., மற்றும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கார்மேகம் இ.ஆ.ப., ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் விருதும், பாராட்டுச் சான்றிதழும் பெற்றனர்.

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைகள் சிறந்த தொடர் கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்காகவும், தகவல் தொழில்நுட்பவியல் துறை, மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் தொழில்நுட்ப ரீதியாக உதவியமைக்காகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களால் சம்பந்தப்பட்ட செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்ட சார் ஆட்சியர் திரு. சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., ஈரோடு மாவட்ட சிறப்பு துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டங்கள்), பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஒருங்கிணைப்பு அலுவலர்கள், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அலுவலர்கள், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையில் மாற்றுப் பணியில் பணிபுரிந்தவர்கள் ஆகியோர் மனுக்களை கையாள்வதில் சிறப்பான பங்களிப்பு அளித்தமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பாராட்டு சான்றிதழ் பெற்ற

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நீர் வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9

---